பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
PIN news THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 53

# 69 வருடங்களின் பின்னர் இலங்கையில் இடம்பெறும் பாரிய ஹர்த்தால்





1953ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய ஹர்த்தாலுக்கு 69 வருடங்களின் பின்னர் இன்று நாடளாவிய ரீதியில் மிகப்பெரிய ஹர்த்தால் பிரச்சாரமும் வேலை நிறுத்தமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வெளியேறுமாறு வலியுறுத்தும் நோக்கில் இந்த ஹர்த்தால் பிரச்சாரம் மற்றும் வேலை நிறுத்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது. இதற்கு அரச. மற்றும் அனைத்து தொழிற்சங்க ஆதரவை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று நள்ளிரவு முதல் ரயில்கள் மற்றும் அனைத்து தனியார் பேருந்துகளும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாக அறிவித்துள்ளன. பல ரயில் தொழிற்சங்கங்கள் இந்த ஹர்த்தாலில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே தொழிற்சங்க கூட்டணியின் ஏற்பாட்டாளர் எஸ்.பி.விதானகே தெரிவித்துள்ளார். இதேவேளை. கொழும்பில் இருந்து பொல்கஹவெல. ரம்புக்கனை மற்றும் அளுத்கம ஆகிய பகுதிகளுக்குச் செல்லவிருந்த மூன்று ரயில்கள் நேற்றிரவு இரத்துச் செய்யப்பட்டிருந்தன. இதேவேளை. அனைத்து தனியார் பேருந்துகளும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார். எனினும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் வழமையாக இயங்குவதாக சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார். கல்வித்துறையில் உள்ள அனைத்து ஊழியர்களும் ஹர்த்தால் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

## மக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் பதற்றம்

பொலிஸ் வீதித்தடையில் கடமையில் இருந்த பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே முரண்பாடு ஏற்பட்ட நிலையில் 16 பேர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள பொலிஸ் காவலரண் பகுதியில் வியாழக்கிழமை (5) இரவு 11.30 மணியளவில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றின் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளதுடன் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

குறித்த காவலரணில் கடமையில் இருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் பொலிஸார் அப்பகுதி வழியாக தலைக்கவசம் (ஹெல்மெட்) அணியாமல் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை தடுத்து நிறுத்தி விசாரணை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் வாய்த்தர்க்கம் மோதலாக உருவாகி சம்பவம் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது சம்பவ இடத்தில் ஒன்றுகூடிய பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதுடன் இதனை கட்டுப்படுத்த பொலிசார் துப்பாக்கிச்சூடும் அப்பகுதியில் நடத்தியுள்ளனர்.

அத்துடன் சம்பவத்தை அறிந்து அங்கு சென்ற அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஊடகவியலாளர் உட்பட் 10 இற்கும் மேற்பட்ட பொலிசார் பொதுமக்கள் என 16 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் ஆராய கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி கமல் சில்வா உள்ளிட்ட பொலிஸ் உயர்மட்ட அதி காரிகள் விசாரணையினை முன்னெடுத்து வருகின்றனர்.

## பெண்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க தடை

கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வரும் சூழலில், ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆப்கனிலிருந்து கடந்த ஒகஸ்ட் மாதம் நேட்டோ படைகள் பின் வாங்கப்பட்டதை தொடர்ந்து மீண்டும் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினர்.

தலிபான்கள் ஆட்சி அமைத்த பிறகு மீண்டும் மனித உரிமை மீறல், பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் உள்ளிட்டவை அதிகரித்துள்ளன. சில நாள்களுக்கு முன், 6 ஆம் வகுப்பிற்கு மேல் பெண் குழந்தைகள் பள்ளிகளுக்கு செல்ல தடை விதித்தனர். இந்த சம்பவத்திற்கு உலகளவில் பல்வேறு நாடுகள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

இந்நிலையில், ஆப்கன் தலைநகர் காபூல் மற்றும் பிற மாகாணங்களில் பெண்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க தலிபான்கள் தடை விதித்துள்ளதாக உள்ளூர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றியதை தொடர்ந்து, சர்வதேச உதவிகள் நிறுத்தப்பட்டதால் உணவு பாதுகாப்பின்மையில் உலகளவில் முதல் இடத்திற்கு ஆப்கானிஸ்தான் தள்ளப்பட்டுள்ளது. 2.3 கோடி மக்கள் உணவில்லாமல் தவித்து வருகின்றனர். மேலும், மொத்த மக்கள் தொகையில் 95 சதவீதம் பேர் சரியான உணவு கிடைக்காமல் உள்ளனர்.



# காலி முகத்திடல் போராட்டக்களம் சொல்லி நிற்பது என்ன?



காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் உள்ளிட்ட பல்வேறு சமூக. பொருளாதார. அரசியல் அறிஞர்களும். ஆய்வாளர்களும். கல்வியாளர்களும். புத்திஜீவிகளும் இந்த "கண்கொள்ளாக் காட்சிகள்" குறித்து கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இது ஒரு புரட்சி என்றும். புரட்சியின் ஆரம்ப அறிகுறி என்றும். இவ்வாறான ஒரு போராட்டத்தை இலங்கை கண்டதேயில்லை என்ற கருத்துக்கள் ஊடகங்கள். காணொளிகள். முகநூல் கள் எங்கும் நிரம்பி வழிகின்றன. இவர்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்று வெள்ளத்தில் ஒரு துளியையாவது திரும்பிப்பார்ப்பது நல்லது.

அது மட்டுமன்றி அவர்கள் பேசுகின்ற போராட்ட உதாரணங்கள் பல்தேசிய இனங்கள் வாழ்கின்ற இலங்கைக்கும். இன்றைய பொருளாதார. அரசியல் நெருக்கடிகளுக்கும் பொருத்தமற்றவை. அனைவருக்கும் பொதுவான பிரச்சினை பொருளாதார நெருக்கடி. ஆனால் எழுப்பப்படும் கோஷம் அரசியல் தலைமை தலையணை மாற்றம்.

பொருளாதார நெருக்கடி தேசிய இனப்பிரச்சினையோடு இரண்டறக் கலந்தது. தேசிய இனங்களுக்கு இடையிலான அரசியல் அபிலாஷை கள் வேறுபட்டவை என்பதனால் பொதுவான அரசியல் மாற்றம் அந்த அபிலாஷைகளை நிறைவு செய்ய வாய்ப்பில்லை. நிலவுகின்ற அரசியல் அதிகாரம் இரட்டைத் தன்மையானது. பெரும்பான்மையினருக்கு ஆளவும் சிறுபான்மையினருக்கு அந்த வாய்ப்பை மறுதலிப்பதாகவும் இருக்கையில் காலிமுகத்திடல் அரசியல் தலைமை மாற்றக்கோரிக்கையை சிறுபான்மையினர் எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்வது?

மிக மிக குறைந்தளவான பதிவுகளே காலிமுகத்திடல் செயற்பாடுகள் குறித்து மறுபக்கத்தை பேசுவனவாக உள்ளன. பெரும்பாலானவை கூட்டத்தோடு கோவிந்தா அல்லது ஊரோடு ஒத்தோடு என்ற வகையில் கேள்விக்கு உட்படுத்தாத. பகுத்தாய்வற்ற. அரசியல் அறிவூட்டமற்ற வெறும் காட்சிப்படுத்தல்கள். கோஷங்கள். இவை சிங்கள. பௌத்த தேசியத்தை பாதுகாக்கும். பதிலீடு செய்யும் முயற்சிகளே.

பிரான்ஸில் படித்த. தாயையும். தகப்பனையும் பிரதமர்களாக. பெற்றோராகக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவே காலி முகத்திடலை பிரான்சிய புரட்சியுடன் ஒப்பிடுகிறார் என்றால் அவரை ஜனாதிபதியாக தெரிவு செய்த மக்களின் நிலையை என்ன சொல்வது.

அரசியலில் குடும்ப ஆட்சி ஒழிக்கப்படவேண்டும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. ராஜபக்சாக்கள் மட்டுமல்ல சந்திரிகாவும் இன்றைய சூழலை படிப்பினையாகக் கொள்ள வேண்டும். குடும்ப அரசியலை பண்டாரநாயக்க. சேனநாயக்க குடும்பங்கள்தான் ஆரம்பித்து வைத்தார்கள் என்பதை இன்று காலி முகத்திடலில் கூடி வேடிக்கை பார்க்கும் இளைய தலைமுறை அறிந்திருக்கவேண்டும். பண்டாரநாயக்க குடும்பத்தினைத் தொடர்ந்த அரசியல் வாரிசாகத்தான் ராஜபக்ச குடும்பம் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூடாரத்தில் வாடி அடித்துக்கொண்டார்கள்.

ஜனாதிபதி. பிரதமர். அமைச்சர்கள். பாராளுமன்ற உறுப்பினர் என்ற அனைத்தும் பண்டாரநாயக்க - ரத்வத்த குடும்பத்திற்குள் முடங்கி இருந்தகாலமும் ஒன்று இருந்தது. இது ஓரளவுக்கு இன்று காலி முகத்திடலில் குரல் எழுப்பும் தமிழ். முஸ்லீம். மலையக குடும்ப வாரிசு அரசியல்வாதிகளுக்கும் பொருந்திப் போகின்ற ஒன்று. சந்திரிகா உட்பட இவர்கள் அனைவரும் அம்மாவையும் அனேகமாக அப்பாவையும். பாட்டன். பூட்டனையும் அரசியலுக்கு முதலிட்டவர்கள். அந்த முதலீட்டு இலாபத்தை பாராளுமன்றத்தில் அனுபவித்துக்கொண்டு குடும்ப வாரிசு அரசியலுக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள்.

ராஜபக்ச குடும்பம் கோ ஹோம் கோசம் போடும் இவர்கள் அவர்களோடு சேர்ந்து போகத்தயாரா? அல்லது அதற்கு முன்னுதாரணமாக பதவி துறக்கத்தயாரா? அப்படியானால் முதலில் போகவேண்டியவர் "நான் பிரேமதாசாவின் மகன்" என்று போற இடமெல்லாம் பிரேமதாசாவை விற்கும் சஜீத் இல்லையா? கஜேந்திரகுமார் ஜீ.ஜீ.பொன்னம்பலம் இல்லையா? ஜீவன் தொண்டமான் இல்லையா? பாக்கீர் மார்க்கார் இல்லையா? ஏனெனில் வாரிசு அரசியல் வரிசையே காலப்போக்கில் குடும்ப ஆட்சிக்கு காலாகிறது.

பிரான்சிய புரட்சியின் சுதந்திரம். சமத்துவம். சகோதரத்துவம் என்ற உன்னத சமூக. பொருளாதார. அரசியல் கோட்பாட்டை சந்திரிகா வெறும் வார்த்தையாடல்களையும். பாதைகளையும். மூன்று இனத்தவர்களும் கூடி இருப்பதையும் வைத்து மதிப்பிட்டிருப்பது குறித்து அவர் மீது அனுதாபப்படுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்.

அதே புரட்சித்திடலில்(?) தமிழில் தேசிய கீதம்பாடியதற்கு பௌத்த பிக்குவின் எதிரொலி பிரான்சிய புரட்சிக்குரியதா..? அடுப்பே எரிய வழியில்லையாம் சீஸ் இல்லை என்ற விளம்பரம் பிரான்ஸியப் புரட்சிக்குரியதா? கட்சி முக்கியஸ்தர்கள் பதவிக்காக அங்கும் இங்கும் ஓடி மக்களின் துயரில் சுற்றிவளைப்பது பிரான்ஸிய புரட்சிக்குரியதா..?

மகிந்தவுக்கும் பிரதமர் வேண்டும். வீரவன்சவுக்கும். ரணிலுக்கும். மைத்திரிக்கும். அநுரகுமாரவுக்கும் மற்றவர்களுக்கும் அதுவே வேண்டும்.

நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் வெற்றிபெற்றாலும் தான் பிரதமர் ஆவதற்கான வாய்ப்பு அரிது என்பதால் பிரேரணையைக் கொண்டுவரவும் முடியாமல். ஒரு சரியான முடிவையும் எடுக்கவும் முடியாமல் எதிர்கட்சி தலைவர் பதவியை தீர்வு முயற்சிகளைத் தடுப்பதற்கு பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்கிறார்.

மேற்குலக முகவர் நிறுவனங்களில் ஒன்றான யூனிசெப் 15 வயது சிறுவனின் சீஸ் சாப்பிட முடியவில்லை என்ற கவலையை விளம்பரப்படுத்துவதில் உள்ள வர்க்க அரசியல் என்ன? இதே போன்றுதான் மனித உரிமை. ஜனநாயகம். சுற்றாடல். மாற்றுக்கொள்கை என்ற மகுடங்களைத்தாங்கி மேற்குலக முகவர்கள் காலிமுகத்திடலில் களத்தில் நிற்கிறார்கள்.

இவர்கள் இலங்கை மக்களில் எந்தப்பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்?

உதவித் திட்டங்கள் என்ற பெயரில் பெறப்படும் நிதியில் குளிரூட்டப்பட்ட வசிப்பிடம். குளிரூட்டப்பட்ட வாகனம். மேற்குலக உணவும் மதுவும். நிர்வாகச் செலவு சம்பளம் என்று ஏப்பம் விட்டுவிட்டு எஞ்சிய ஒரு சிறுபகுதியே மக்களுக்கு உதவியாக பயன்படுத்தப்படுகிறது.

சந்திரிகாவே காலிமுகத்திடலில் நுனிப்புல் மேய்கையில் சாதாரண இலங்கைக் குடிமக்களின் நிலை என்ன? புதினம் பார்க்க பிள்ளைகளோடு வந்து எட்டு. பத்து வயதுப் பிள்ளைகள் கோத்தபாயாவை "கள்ளன்" என்று திட்டும் காட்சியைப் படம் எடுத்து முகப்புத்தகங்களில் பதிவிட்டு பெருமைப்படும் பிள்ளை வளர்ப்பு. கல்வியூட்டும் பொறுப்பணர்வை என்ன என்பது?

நூலகம். அங்கவீனப்பட்ட இராணுவ வீரர்கள். மூன்று மொழியிலுமான எழுத்துப்பிழையற்ற பதாகைகள். பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றுதல். இடம்பெற்ற அரசியல் கொலைகள் பற்றி விழிப்பூட்டுவதில் தவறில்லை. ஆனால் இன்றைய பொருளாதார. அரசியல் நெருக்கடிக்கு இதன் தீர்வு என்ன? பிரான்சிய புரட்சியின் அடிப்படையிலான சிறுபான்மைத் தேசிய இனங்களின் அதிகாரப் பரவலாக்கம். மொழி. மதம். கலாச்சார. பண்பாட்டு உரிமைகள் பற்றி பேசாது கடற்கரையில் கூடியிருக்கும் மக்கள் தொகையை மட்டும் பார்த்து அதன் சமூக. பொருளாதார. அரசியல் உள்ளடக்கத்தை பார்க்கத்தவறுகிறோம்.

தனிமனிதன். குடும்பம். சமூகம் என்ற கட்டமைப்பில். மரபு ரீதியான இடதுசாரிகளும். அவர்களின் கொள்கைகளும் ஒட்டுமொத்த சமூகத்தை நோக்கிய பார்வையைக் கொண்டுள்ளனர். இதனால் சமூகத்திற்குள் உள்ள பல்வேறு சமூக. பொருளாதார. அரசியல். கலாச்சார பண்பாட்டு. பிரதேச வேறுபாடுகளை அவர்கள் பார்க்கத்தவறுகின்றனர். அல்லது பார்த்தாலும் பொருளாதார வர்க்கங்களான முதலாளி. தொழிலாளி வேறுபாட்டை மட்டுமே அவர்கள் நோக்குகின்றனர். அந்த முதலாளிக்குள்ளும். தொழிலாளிக்குள்ளும் இருக்கின்ற சமூக. பண்பாட்டு கலாச்சார உள்ளக வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

இவர்களே மரத்தை. மரத்தொகுதியை பார்க்கத்தேவையில்லை காட்டைப் பாருங்கள் என்று அறைகூவல் விடுகின்றனர். ஆனால் இந்த "காட்டைப் பார்த்தல்" அணுகுமுறை தோல்வியடைந்தும் காலாவதியுமாகிய ஒன்று. காட்டை நாம் பாதுகாக்க வேண்டுமானால் மரத்தையும். மரக்குழுமத்தையும் தவிர்த்து அதைச்செய்யமுடியாது. தனிமரம் இல்லாமல். பல்வேறு வகைப்பட்ட மரத்தொகுதிகள் இல்லாமல் காடு இல்லை. இலங்கையைப் பொறுத்தமட்டில் எப்போது காட்டைப்பார்த்து கொல்வின் ஆர்.டி.சில்வா குடியரசு அரசியலமைப்பை வரைந்தாரோ. அதற்கு முன் பண்டாரநாயக்க தனிச்சிங்கள சட்டம் கொண்டு வந்தாரோ அன்றே காட்டைப் பார்க்கும் மரபு ரீதியான இடதுசாரி அரசியல் கவிழ்ந்துவிட்டது.

என்.எம்.பெரேரா. பீற்றர் கெனமன் போன்றவர்களும் காட்டையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஜே.வி.பியும் அதையே செய்கிறது. இதனால்தான் சண்முகதாசன். வி.பொன்னம்பலம் போன்றவர்கள் காட்டைப் பார்ப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. வி.பொன்னம்பலம் காட்டுக்குள் புகுந்து கண்ட தனித்துவ இனக்குழு அடையாளமே செந்தமிழர் இயக்கம்.

04ஆம் பக்கம் பார்க்க...

**அழகு குணசீலன்**

# இலங்கைத் தமிழ் மண்ணில் பிறந்த எவரும் இனிமேலாவது இராவணன் என்ற ஒரு தமிழ் மன்னன் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை என்று கூறக்கூடாது - கன்னியா மலையில் காணப்படும் இராவணனின் தாயின் சமாதி - அது தொடர்பான ஆய்வுகளும், ஆதாரங்களும்










திருகோணமலையின் அருகில் உள்ள கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. இவ்வெந்நீர் ஊற்றுகளைச் சுற்றி கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வெந்நீர் ஊற்றுகள் சிவபக்தனான இராவணன் தன் தாயின் ஈமக் கிரியைகளை நிறைவேற்றுவதற்காக உருவாக்கியவையாகும். இவ்வெந்நீர் கிணறுகளின் அருகில் ஓர் மலை உள்ளது. இது கன்னியா மலை என அழைக்கப்படுகிறது. இம்மலையின் உச்சியில் 60 அடி நீளமான சமாதி உள்ளது. 40 அடி என்றும் சொல்கிறார்கள். இது ஓர் இஸ்லாமியரின் சமாதி என்றே அண்மைக்காலமாக கூறப்பட்டு வருகிறது.

கன்னியா வெந்நீர் கிணறுகளையும். அங்குள்ள சமாதியையும் பார்ப்பதற்காக 1980 ஆம் ஆண்டு முதன் முதலாக கன்னியாவுக்கு சென்றேன். அப்போது அங்கு கடமையில் இருந்த காவலாளியிடம் கன்னியா மலையில் உள்ள சமாதியைப் பற்றி விசாரித்த போது. அவர் கூறிய விபரங்கள் சற்று புதுமையாக இருந்தது. மலையில் 60 அடி நீளமான ஓர் பிரமாண்டமான சமாதி உள்ளது. அதுதான் இந்த வெந்நீர் ஊற்றுக்களை உருவாக்கிய இராவணனின் தாயின் சமாதி. இஸ்லாமியர்கள் அதை ஓர் இஸ்லாமிய பெரியவரின் சமாதி என்று சொல்கின்றனர். நீங்கள் போய்ப் பார்க்கலாம் எனக் கூறி. தனது பிள்ளைகள் இருவரை எனக்கு வழிகாட்டியாக என்னோடு மலைக்கு அனுப்பி வைத்தார். மலை உச்சிக்குச் சென்று பிரமாண்டமான அந்த சமாதியைப் பார்த்து வியப்படைந்தேன். அப்படி ஓர் நீளமான சமாதியை அன்று தான் முதல் முறையாகப் பார்த்தேன். மலையில் இருந்து இறங்கி வந்ததும் இது இராவணனின் தாயின் சமாதி தானா? என மீண்டும் அவரிடம் கேட்டேன். ஆம். எனது மூதாதையர்கள் அப்படித்தான் என்னிடம் சொன்னார்கள் என்றார் காவலாளி. வெந்நீர் ஊற்றுக்களில் நீராடியதும். மிகப்பெரிய சமாதியைப் பார்த்ததும் பெருமிதமாக இருந்தது.

அதன்பின் 2014 ஆம் ஆண்டு "யார் இந்த இராவணன்" எனும் தொடர் ஆய்வுக் கட்டுரையை நான் பத்திரிகையில் எழுதி வந்த போது. இராவணனின் தாயாரின் சமாதி பற்றிக் குறிப்பிட வேண்டி இருந்தது. அது பற்றிய ஆதாரங்களை ஆராய்ந்தபோது தான் இந்திய ஆய்வாளரான அசோக்காந்த் எழுதிய குறிப்பொன்றைப் படித்தேன். கன்னியா மலையில் இருப்பது இராவணனின் தாயின் சமாதி என அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இதற்கான எந்த ஆதாரத்தையும் அவர் முன் வைத்திருக்கவில்லை. இராவணன் தனது தாய்க்கு ஈமக் கிரியைகள் செய்த இடத்தில் தானே தாயின் சமாதியை அமைத்திருப்பான் எனும் யூகத்திலேயே அக்குறிப்பை எழுதியிருந்தார். இந்த ஆதாரத்தை வைத்து "யார் இந்த இராவணன்" கட்டுரையில் கன்னியா மலையிலுள்ள சமாதி இராவணனின் தாயின் சமாதி என முதன் முதலாக எழுதினேன். 2018 ஆம் ஆண்டு "யார் இந்த இராவணன்?" புத்தகமாக வெளிவந்தது.

இது இப்படி இருக்க. கடந்த வருடம் கன்னியா வரலாறு பற்றிய ஓர் முழுமையான நூலை எழுத வேண்டிய ஓர் தேவை ஏற்பட்டது. அப்போது கன்னியாவில் இருந்த சிவன் கோயில், பிள்ளையார் கோயில், இராவணனின் தொடர்பு. இராவணனின் தாயின் சமாதி போன்றவை பற்றிய வாய்வழிச் செய்திகளும். ஐதீகங்களும் மட்டுமே இருந்தன. இவற்றிற்கான வலுவான பழமையான ஆதாரங்கள் இருக்கவில்லை. இந்த சமயத்தில் கன்னியா மலையில் உள்ள சமாதி இராவணனின் தாயுடையது என்பதற்கு வலுவான ஆதாரங்களை இந்த நூலில் எழுத வேண்டும் என எண்ணினேன். ஏனெனின் எனது சந்தேகமும் இராவணன் தனது தாய்க்கு கிரியைகள் செய்த இடத்தில் தானே தாய்க்கு ஓர் ஞாபகச் சின்னத்தை அமைத்திருக்க வேண்டும் என்பதே.

கொழும்பு. திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள நூலகங்களுக்குச் சென்று இவை பற்றி ஐரோப்பிய அறிஞர்கள் எழுதிய ஆதாரங்களைத் தேடினேன். கன்னியா பற்றிய நான்கு ஆதாரங்கள் கிடைத்தன. ஆனால் அவை எனக்கு திருப்தி அளிக்கவில்லை. அவை அவ்வளவு பழைய ஆதாரங்கள் அல்ல. இருப்பினும் முயற்சியைக் கைவிடவில்லை. ஐரோப்பிய நாடுகளில் உள்ள நூலகங்கள். பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் கன்னியா பற்றிய குறிப்புகள் கிடைக்குமா என இணைய தளங்கள் மூலம் தேடினேன். விடாமுயற்சியுடன் இரண்டு மாதங்கள் வரை தேடினேன். இறுதியில் இங்கிலாந்து. கலிபோர்னியா (அமெரிக்கா). கனடா. போர்த்துக்கல் ஆகிய நாடுகளில் உள்ள நூலகங்களில் இருந்து கன்னியா பற்றிய பல நூல் குறிப்புகள் கிடைத்தன. இங்கு கிடைத்தவை 26 நூல் ஆதாரங்கள். மொத்தமாக இப்போது 30 ஆதாரங்கள் என் கையில் இருந்தன. இவை சுமார் 300 வருடங்களுக்கு முற்பட்ட ஆதாரங்களாகும். இவற்றில் கன்னியா மலையில் உள்ள சமாதி பற்றிய 5 ஆதாரங்கள் கிடைத்தன.

பிரமாண்டமான சமாதி காணப்படும் கன்னியா மலையின் உண்மையான பெயர் பெரிய கரடிமலை என்பதாகும். இம்மலையில் கரடிகள் அதிகமாக வாழ்வதால் இப்படி ஒரு பெயர் வைக்கப்பட்டுள்ளது. இம்மலை இங்கிருந்து விளாங்குளம் வரை 5 கி.மீ தூரம் வரை ஒடுங்கி. நீளமாகக் காணப்படும் தட்டையான மலையாகும். இம்மலைக்கு இரண்டு உச்சிகள் உள்ளன. கன்னியாவில் உள்ள உச்சியில் சமாதி உள்ளது. இவ்வுச்சி 50 மீற்றர் உயரம் கொண்டது. அடுத்த உச்சி விளாங்குளத்தின் அருகில் உள்ளது. இது 100 மீற்றர் உயரமானது. கன்னியா மலை அடர்ந்த காட்டுப் பகுதியின் ஆரம்ப இடமாகும். இக்காடு கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் இருந்து தெற்குப்பக்கம் 6 கி.மீ வரையும். மேற்குப்பக்கம் 16 கி.மீ வரையும். தென்மேற்குப்பக்கம் ஹபரணை வரை 80 கி.மீ நீளம் கொண்ட மிகப்பெரிய காடாகும்.

**கன்னியாவுடன் தொடர்புள்ள இராவணனின் தாய் பற்றிய விபரங்கள் பின்வருமாறு**

தீவிர சிவபக்தையான இராவணனின் தாய் கைகேசி சுகவீனமாக இருந்த வேளை தட்சிண கைலாயம் எனும் திருக்கோணேஸ்வரத்தில் இருக்கும் சிவனைத் தரிசிக்க விரும்பியதாகவும். தன் விருப்பத்தை மகன் இராவணனிடம் கூறியபோது இராவணன் தாயின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு சுவாமி மலையில் இருந்த சிவாலயத்தை மலையோடு சேர்த்து வாளால் வெட்டி எடுக்க முற்பட்டதாகவும். அப்போது சிவன் இராவணனின் கையில் வலியை உண்டாக்கி வாளை கீழே விழச் செய்ததாகவும் ஓர் ஐதீகம் உள்ளது. இத்தனை முயற்சிகள் எடுத்தும் இராவணனின் தாய் கைகேசி இறுதிவரை தட்சிண கைலாயப் பெருமானை தரிசிக்காமலேயே உயிர் துறந்தாள். தாய் இறந்த பின்பு அவளின் ஈமக்கிரியைகளை கன்னியா கங்கை தீர்த்தத்தில் செய்து முடித்த இராவணன் அவ்விடத்திலேயே தாயின் சமாதியையும் அமைத்தான். கன்னியா மலையில் உள்ள சமாதி இராவணனின் தாயின் சமாதி என்பது பலருக்குத் தெரியாத விடயமாகும். தாயின் சமாதியின் அருகிலேயே இராவணனின் சமாதியும் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதே சமயம் கன்னியா மலையில் உள்ள இராவணனின் தாயின் சமாதி இவ்வளவு நீளமாக ஏன் இருக்க வேண்டும்? அதற்கும் ஓர் காரணம் உள்ளது. கன்னியா மலையில் உள்ள சமாதி பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு இராவணன் தன் தாய்க்கு அமைத்த சமாதியாகும். இராவணனின் தாய் ஓர் யக்ஷ குலப்பெண் என்பது குறிப்பிடத்தக்கது. யக்ஷ குலத்தைச் சேர்ந்தவர்கள் பெரிய இராட்சத உடலமைப்பைக் கொண்டவர்கள் எனும் அர்த்தத்திலேயே மலை மீது மனித உருவத்திற்கு அப்பாற்பட்ட வகையில் 60 அடி நீளத்தில் சமாதி அமைக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் இராவணனின் சமாதியும் அவனது தலைநகருக்கருகில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள திரிகூடகிரி என்பது கோணசர் மலையாகும். எனவே இராவணனின் சமாதியும் அவனது தாயின் சமாதியின் அருகிலேயே அமைக்கப்பட்டிருக்கவேண்டும். இரண்டு யக்ஷர்களின் பெரிய இருவேறு சமாதிகள் பிற்காலத்தில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு 40 அல்லது 60 அடி நீளத்தில் அமைக்கப்பட்டன எனக் கூறப்படுகிறது. எனவே இவ்வளவு நீளத்தில் காணப்படும் இப்பெரிய சமாதி இராட்சத அரக்கர்கள் எனக் கூறப்படும் இராவணனினதும், அவனின் தாயாரினதும் சமாதிகள் என ஆய்வாளர்கள் கூறுவது பொருத்தமாக உள்ளது.

இராவணன் தனது தாயின் சமாதியை வெந்நீர் கிணறுகளின் அருகில் அமைக்காமல் ஏன் மலை உச்சியில் அமைக்கவேண்டும்?

அதற்கும் ஓர் முக்கிய காரணம் உள்ளது. இராவணனின் தாயான கைகேசியின் நெடுநாள் ஆசையானது தட்சிண கைலாசம் எனும் திருக்கோணேஸ்வரத்தில் வீற்றிருக்கும் சிவனை தரிசித்து வழிபடுவதாகும். ஆனால் இராவணன் தன் தாயின் ஆசையை நிறைவேற்ற இரண்டு தடவைகள் முயற்சி செய்தும் அதை நிறைவு செய்ய முடியாமல் போய்விட்டது. தாயும் நிறைவேறாத ஆசையோடு உயிர் துறந்தார். அதன்பின் இராவணன் தாயின் கிரியைகளை முடித்துவிட்டு கன்னியா மலை உச்சியில் சமாதியை அமைத்தான். இம்மலை உச்சியிலிருந்து திருக்கோணேஸ்வரத்தை அழகாகத் தரிசிக்கலாம்.

எனவே தனது தாயின் இறுதி ஆசையான திருக்கோணேஸ்வரப் பெருமானை தரிசிக்க வேண்டும் எனும் வேண்டுகோளை தாய் இறந்த பின்பாவது நிறைவேற்றவேண்டும் எனும் எண்ணத்துடன் மலை மீது தாயின் சமாதியை இராவணன் அமைத்திருக்கவேண்டும். இச்சமாதி மீது இருந்து தன் தாயின் ஆன்மா என்றென்றும் திருக்கோணேஸ்வரப் பெருமானை நேரடியாகவே தரிசித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதே சிவ பக்தனான இராவணனின் ஆசையும். சிவன் மீது அதீத பற்று கொண்ட தாய்க்குச் செய்யும் கடமையும் ஆகும் என இராவணன் நினைத்திருக்க வேண்டும். (04ஆம் பக்கம் பார்க்க...)

**என்.கே.எஸ்.திருச்செல்வம். வரலாற்று ஆய்வாளர். இலங்கை.**

02ஆம் பக்கத் தொடர்ச்சி...

இதற்கு முன் அவர் காட்டைப்பார்த்தே காங்கேசன் துறையில் தந்தை செல்வாவை எதிர்த்து இடைத்தேர்தலில் போட்டியிட்டார்.

காலிமுகத்திடலில் "காட்டைப் பார்ப்பது" என்பது அடிப்படைகள் அற்ற அற்புதமான நுனிப்புல் மேய்தல் அரசியல். ஆனால் அந்தக்காட்டுக்குள் உள்ள மரங்களையும். மரத் தொகுதிகளையும் தேடுவதே யதார்த்த அரசியல். அந்தக் காடு சிங்கள பௌத்த தேசியவாதக்காடு. அதற்குள் தமிழ். முஸ்லீம். மலையக சமூகங்களைச் சார்ந்தவர்கள் மரங்களாகவும். மரத்தொகுதிகளாகவும் நிற்கிறார்கள். ஆனால் அவர்களின் தனித்துவமான பிரச்சினைகள். அதற்கான தீர்வுகள். அதை அடைவதற்கான வழிமுறைகள் அங்கு பேசப்படவில்லை என்பதே எழுகின்ற ஆதங்கமாகும்.

காட்டுக்கு காவல்காரனை மாற்றினால் காட்டுக்குள் உள்ள பல்வேறு இன மரங்களினதும். செடிகொடிகளினதும் அவற்றின் தொகுதிகளினதும் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பது பின் நவீனத்துவம் சார்ந்த புரட்சிகர சிந்தனைகளை மறுத்து. மழுங்கடித்து செய்யப்படுகின்ற எதிர்ப்புரட்சி.

இதுதான் காலிமுகத்திடல் காட்சி..!

சிங்கள மக்கள் தங்கள் பிரச்சினைக்கு தீர்வாக கோத்தா கோ ஹோம் பாடுவது மற்றொரு சிங்கள பௌத்த பேரினவாத அரசை பதிலீடு செய்வதற்கான கெதறட்ட யண்ட!

கிறிஸ்தவ சமூகம் கோத்தா கோ ஹோம் பாடுவது ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பொறுப்பாளிகளை வீட்டுக்கு அனுப்புவதற்கு. இதன் ஒரு வெளிப்பாடே சிறிசேனவுக்கு இடைக்கால அரசில் இடம் கொடுக்கக்கூடாது என்ற கோரிக்கை!

முஸ்லீம் மக்கள் ஜனாஸா எரிப்புக்கும், ஈஸ்டர்தாக்குதலால் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கும். ரிஷாட் பதியூதீன் வீட்டு வேலைக்காரி தொடர்பாக அந்தச் சமூகம் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கும். இஸ்லாமிய சட்டவிவகாரங்களுக்காகவும். இனவாத அணுகுமுறைக்காகவும் கோத்தா அரசுக்கு பதிலடி கொடுக்க நினைக்கிறார்கள். அதற்காக கோத்தா கோ ஹோம்!

மலையக மக்கள் இந்த அரசாங்கம் இனவாத பாரபட்சத்தை. இணங்கிய ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்கவில்லை. மலையக பல்கலைக்கழகம் அமைக்கப்படாமை. தோட்ட குடியிருப்பு காணிகள் பறிக்கப்படுதல். பிரதேச செயலக கட்டமைப்பு வழங்கப்படாமை என்ற காரணங்களால் வீட்டுக்கு போகச் சொல்கிறார்கள்...!

ஈழத்தமிழர்கள் முள்ளிவாய்க்கால் அழிவுகளுக்கும். அதற்கு பின்னரான அரசியல் தீர்வின்மைக்கும். உரிமைகள் மறுக்கப்படுவதற்கும் ஒரு சந்தர்ப்பமாக இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப நினைக்கிறார்கள். ஆனால் அதற்கு முன் சில உறுதிமொழிகளை புதிய ஆட்சியாளர்களிடம் கோரி நிற்கிறார்கள் ..!

ஆக. காலிமுகத்திடல் வெறும் காட்டுவிவகாரம் அல்ல. பொது பொருளாதார நெருக்கடியையும் விஞ்சிய வேறு தனித்துமான பல தேசிய இனங்களின் பிரச்சினைகள் இங்கு செல்வாக்கு செலுத்துகின்றன.

மரத்தையும். மரக்தொகுதிகளையும் கவனியாது புறக்கணித்து கடந்து சென்று காட்டை மட்டும் முதன்மைப்படுத்தியதன் சமூக பொருளாதார விளைவு இது.

காட்டுத்தலைவனை/ காவல்காரனை வீட்டுக்கு அனுப்பலாம். ஆனால் வருகிற புதிய தலைவன் பௌத்த சிங்கள தேசிய காட்டை மட்டுமல்ல அதற்குள் உள்ள தனித்துவ பன்மைத் தேசிய இனங்களான மரம். செடி. கொடி அனைத்தையும் சமமாகப் பார்ப்பான் / பராமரிப்பான் தாவரவியல் வேற்றுமையையும். பன்மைத்தன்மையையும் பாதுகாப்பான் என்பதற்கு காலி முகத்திடலில் பதிலைத் தேடுகிறார்கள் சிறுபான்மைத் தேசிய இனங்கள்.

03ஆம் பக்கத் தொடர்ச்சி...

இச்சமாதி ஓர் இஸ்லாமியப் பெரியவரின் சமாதி எனவும் சிலர் கூறுகின்றனர். இம்மலையில் இராவணன் காலத்துடன் தொடர்புடைய தொன்மை வரலாற்றை அறிந்திராத சிலரே இவ்வாறு கூறுகின்றனர். 200 வருடங்களுக்கு முன்பு இலங்கையை ஆராய்ந்து தமது நூல்களில் ஆவணப்படுத்திய ஐரோப்பிய அறிஞர்கள் யாரும் கன்னியா மலையில் உள்ள சமாதி இஸ்லாமிய பெரியாருடையது எனக் குறிப்பிடவில்லை. மாறாக இது இராவணன் மற்றும் அவனின் தாயின் சமாதி எனும் பொருளில் ஓர் இராட்சதனினதும். அவனின் மகனினதும் சமாதி என்றே குறிப்பிட்டுள்ளனர்.

கன்னியா மலையில் உள்ள சமாதி பற்றிய அறிஞர்களின் குறிப்புகள்.

ஜேம்ஸ் கோர்டினரின் குறிப்பு

கன்னியா மலையில் உள்ள சமாதி பற்றி ஜேம்ஸ் கோர்டினர் எனும் வரலாற்றறிஞர் 1798 ஆம் ஆண்டு அவர் எழுதிய "A Description of Ceylon" எனும் நூலில் பின்வருமாறு விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

"On the Summit of the above mentioned Hill are shewn two monumental piles of earth enclosed with loose stones, one thirty-six feet in length, and ten in breath, the other ten feet long, and three broad. They are said to be the dimensions of a giant and his son, who were buried there at a very remote period in the fabulous History of Ceylon."

இக்குறிப்பில் கன்னியா மலையின் உச்சியில் இறுக்கமற்ற கற்களினால் சுற்றிவர கட்டப்பட்ட இரண்டு நினைவுச் சின்னக் குவியல்கள் காணப்படுவதாகவும். அவற்றில் ஒன்று 36 அடி நீளமும். 10 அடி அகலமும் கொண்டதாகவும். அடுத்தது 10 அடி நீளமும். 3 அடி அகலமும் கொண்டதாகவும் காணப்படுகிறது. இவை இலங்கை வரலாற்றில் நம்பமுடியாத மிகமிகத் தொன்மையான காலத்தில் புதைக்கப்பட்ட ஓர் இராட்சதன் மற்றும் அவனின் மகன் ஆகியோரினது பரிமாணங்கள் எனக் கூறப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஜேம்ஸ் கோர்டினரின் மேற்சொன்ன குறிப்பு இராவணன் மற்றும் அவனின் தாய் ஆகியோரின் சமாதியைக் குறிக்கிறது என்பதற்கு இவர் பயன்படுத்தியிருக்கும் "இலங்கை வரலாற்றில் நம்பமுடியாத மிகமிகத் தொன்மையான காலத்தில் புதைக்கப்பட்ட ஓர் இராட்சதன் மற்றும் அவனின் மகன்.." எனும் சில வரிகள் ஏதுவாக அமைகின்றன. இவரின் குறிப்பின் படி இராவணனின் தாயின் சமாதி 36 அடி நீளமும். இராவணனின் சமாதி 10 அடி நீளமும் கொண்ட இரு வேறு சமாதிகளாக மொத்தமாக 46 அடி நீளமாக இருந்துள்ளன. அண்மைக்காலத்தில் இவ்விரு சமாதிகளையும் ஒன்றாக்கி கட்டியவர்கள் 60 அடி சமாதி எனப் பெயரிட்டு. இது ஓர் இஸ்லாமியப் பெரியாரின் சமாதி எனக் கதை கட்டிவிட்டனர்.

சைமன் காசிச்செட்டியின் குறிப்பு

மேலே சொன்ன கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் சைமன் காசிச்செட்டி எனும் அறிஞர் 1833 ஆம் ஆண்டு அவர் எழுதிய "The Ceylon Gazetteer" எனும் நூலில் "Fasing the west side there are several hills, and on the Summit of one is shewn the remains of the Tombs of a Giant and his son." எனக் கூறியுள்ளார். இக்குறிப்பில் சைமன் காசிச்செட்டி இங்குள்ள மலை உச்சியில் ஓர் இராட்சதனினதும். அவனின் மகனினதும் சமாதியின் சிதைவுகள் காணப்படுகின்றன என்றே குறிப்பிட்டுள்ளார்.

சார்லஸ் ப்ரிதாமின் குறிப்பு

இதே குறிப்பை சார்லஸ் ப்ரிதாம் எனும் ஆராய்ச்சியாளர் 1849 ஆம் ஆண்டு தான் எழுதிய "An Historical Political and Statistical of Ceylon" எனும் நூலில் "The Summit of one is shewn the remains of the Tombs of a Giant and his son." எனக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று அறிஞர்களின் கூற்றுக்கும் வலு சேர்க்கும் ஹரி வில்லியம்ஸின் குறிப்பு

கன்னியா பற்றி ஹரி வில்லியம்ஸ் எனும் அறிஞர் 1950 ஆம் ஆண்டு எழுதிய "Ceylon Pearl of the East" எனும் நூலில் சில முக்கிய விபரங்களைக் கூறியுள்ளார். மேலே கன்னியா மலையில் உள்ள சமாதியை மூன்று அறிஞர்களும் "Tombs of a Giant and his Son" என்றே குறிப்பிட்டுள்ளனர். இது இராட்சதன் மற்றும் அவனின் மகன் எனப் பொருள்படும். இங்கே இராட்சதன் என்பது இராவணனையே குறிப்பதாகும். இக்கூற்றுக்கு வலு சேர்க்கும் வகையில் இந் நூலில் ஹரி வில்லியம்ஸின் குறிப்பு அமைந்துள்ளது. அக்குறிப்பின் பின்பகுதி கீழ்வருமாறு.

"According to them King Ravanna, during his long war with Vishnu, was informed by that deity that Kanya virgin mother of the King of Ceylon, was dead. Ravanna naturally had to set about the task of performing the necessary obituary services for the beloved dead, and Vishnu to help him … and incidentally to accomplish his main design of delaying him … Caused hot springs to burst out of the ground for the Giant's use. and there they remain.

மேலே கன்னியா பற்றி ஹரி வில்லியம்ஸ் குறிப்பிட்டுள்ள விபரங்களில் இராவணன் தன் தாய்க்கு கிரியைகள் செய்வதற்காக இவ்வெந் நீர் ஊற்றுகள் உருவாக்கப்பட்டன எனும் செய்தியே கூறப்பட்டுள்ளது. இப்பந்தியின் கடைசி இரண்டு வரிகளும் மிக முக்கியமானவையாகும்.

இதில் "caused hot springs to burst out of the ground for the giant's use. And there they remain." எனக் கூறப்பட்டுள்ளது. இது "வெந்நீர் ஊற்றுக்கள் இரட்சதனின் பாவனைக்காக நிலத்திலிருந்து திடீரெனத் தோன்றின. அங்கே அவை நிலைத்து இருக்கின்றன."எனப் பொருள்படுகிறது. இதில் இவர் நேரடியாகவே இராவணனை Giant எனக் கூறியுள்ளார். எனவே "Tombs of a Giant and his Son" என மேலே மூன்று அறிஞர்களும் குறிப்பிட்டிருப்பது இராவணன் மற்றும் அவனின் தாயின் சமாதியையே என்பது ஹரி வில்லியம்ஸின் குறிப்பு மூலம் உறுதியாகிறது.

1919 ஆம் ஆண்டு திருகோணமலை தேசப்படத்தில் கன்னியாவில் ராட்ஷசன் இராவணனின் சமாதி கன்னியா மலையில் இராவணனின் தாய் மற்றும் இராவணன் ஆகியோரின் சமாதியே உள்ளது என்பதற்குச் சான்றாக இன்னுமோர் ஆதாரமும் காணப்படுகிறது. அது 1919 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட திருகோணமலையின் தேசப்படமாகும். இத்தேசப்படத்தின் இடது பக்க மேல் மூலையில் "Kannia-Giants Tombs" (கன்னியா இராட்ஷசன் சமாதி) எனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேசப்படத்தின் விபரங்கள் "Description" என படத்தின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இதில் "This map shows the Giants Tombs near Kannia, possibly referring to the mythical King Ravana." என கன்னியா சமாதி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இந்த தேசப்படத்தில் கன்னியா ராட்சசன் சமாதி எனக் குறிப்பிடப்பட்டிருப்பது புராண காலத்து மன்னன் இராவணனைக் குறிப்பதாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள ஐந்து அறிஞர்களும் இச்சமாதிகள் இராட்சசர்களின் சமாதிகள் எனும் பொருள்படக் கூறியுள்ளனரேயன்றி இஸ்லாமியப் பெரியாருடையது எனக் கூறவில்லை. இவ் அறிஞர்கள் கன்னியா மலைக்கு சென்றபோது இப்பகுதியில் வசித்த மக்கள் இராவணன் மற்றும் அவனின் தாய் ஆகியோருடன் கன்னியாவுக்கு இருந்த தொடர்புகள் பற்றிக் கூறியுள்ளனர். அவர்களின் சமாதியே மலை உச்சி யில் இருப்பவை எனவும் கூறியுள்ளனர். அறிஞர்களும் இக்கருத்தையே தமது நூலில் குறிப்பிட்டுள்ளனர். சுமார் 200 வருடங்களுக்கு முன்பும் இது இராட்சதர்களின் சமாதியாகவே காணப்பட்டுள்ளது.

இறுதியில் கன்னியா மலையில் உள்ள சமாதி ஓர் இஸ்லாமியப் பெரியவரின் சமாதி என இதுவரை கூறப்பட்டு வந்த கூற்றுக்கு எந்தவித ஆதாரங்களும் இல்லை என்பதும். இச்சமாதி இராவணனினதும். அவனின் தாயாரினதும் சமாதியே என்பதுக்கு 300 வருடங்களுக்கு முற்பட்ட ஐரோப்பிய அறிஞர்களின் குறிப்புகள் ஆதாரங்களாக இருக்கின்றன என்பதும் நிருபணமாகியுள்ளது.